**சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்**

**உள்ளூர் வர்க்கங்கள்**

- MIBO 1
- தம்புள்ளை தெரிவு
- கற்பிட்டிய தெரிவு

**இறக்குமதி வர்க்கங்கள்**

- ராம்பூர் சிவப்பு
- பூசா சிவப்பு
- கலப்பின வர்க்கம்

**நாற்று மேடையைத் தயாரித்துலும், பராமரித்தலும்**

- விதைகளின் முளைதிறனை பரிசோதித்த பின்னர் நடவும்.
- ஓர் ஏக்கருக்கு 2 - 2.5 கிலோ கிராம் பெரிய வெங்காய விதை அவசியமாகும். நாற்று மேடையின் அளவு நீளம் 10 அடி, அகலம் 3 அடி, உயரம் 6 அங்குலம்.
- ஓர் ஏக்கருக்கான நாற்றுக்களைப் பெற மேற்குறிப்பிட்ட அளவான 60 பாத்திகள் அவசியமாகும்.
- பாத்திகளை தொற்றுநீக்கஞ் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட நாற்றுமேடை பாத்திகளை நன்கு ஈரமாக்கி, நீர் வடிந்து சென்ற பின் வைக்கோலையும், உமியையும் படை, படையாக இட்டு காற்றிற்கு எதிர் திசையில் தீமூட்டவும்.
- எஞ்சிய சாம்பலையும், தேவையற்ற பொருட்களையும் அகற்றவும். இவை சிறிதளவேனும் மண்ணுடன் கலப்பதைத் தவிர்க்கவும்.
- ஒரு பாத்திக்கு 35 - 40 கிராம் விதைகள் தேவையாகும். (1 கி.கிராம் விதைகள் 14 - 15 பாத்திகளுக்குப் போதுமானது.
- பாத்தியில் 4 அங்குல இடைவெளியில் சால்களை (கான்களை) இட்டு, அரை அங்குல ஆழத்திற்கு விதைகளை நடவும்.
- மெல்லிய மண்படையினால் மூடி, பத்திரகலவையிட்டு (மூடுபடை) பூவாயினால் நீரூற்றவும்.
- 4 - 7 நாட்களில் பத்திரக்கலவையை அகற்றி சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினியை விசிறவும்.
- கடும் சூரிய வெளிச்சம், பனி, கடும் மழை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தடிகளை நட்டு பொலித்தீனை பந்தல் போன்று இடவும்.
- கன்றுகள் பலவீனமாக வளருமாயின் யூரியாவை நீரிற் கரைத்து விசிறிய பின், கழுவியகற்றவும் (15 கிராம் யூறியா / 4.5 லீட்டர் நீர்)
- ஒரு மாதத்தின் பின் நாற்றுக்களை வன்மைப்படுத்துவதை ஆரம்பிக்கவும்.
- பசளை இடல் - ஒரு நியம பாத்திக்கு 1 கிராம் யூரியா, 30 கிராம் TSP, 15 கிராம் MOP இடவும். (பாத்திகளை தயார்ப்படுத்தும் போது மண்ணுடன் சேர்க்கவும்)
- நாற்றுமேடையில் நோய்களையும், பீடைகளையும் கட்டுப்படுத்துவது அவசியமாகும். நோய் - நாற்றுமுகல் (சிபாரிசு செய்யப்பட்ட மண் பங்கசு நாசினியை விசிறி கட்டுப்படுத்தவும்).

**தோட்டத்தை ஆயத்தம் செய்தலும், நாற்றுக்களை நடலும்.**

- 20 செ.மீ ஆழத்திற்கு மண்ணை புரட்டி ஆயத்தம் செய்யவும்.
- வயல்களில் நன்கு நீர் வடிந்தோடக் கூடியவாறு கான்களை அமைக்கவும்.
- நிலத்திற்குப் பொருத்தமான வகையில் உயர் பாத்தி, தாழ் பாத்தி அல்லது சமதரையான நிலத்தில் நடுகை செய்யவும்.
- 1 சதுர மீற்றருக்கு 500 கிராம் உமிக் கரியை இடுவதன் மூலம் விளைச்சலை அதிகரிக்க முடியும்.
- நடுகை செய்வதற்காக 4 - 5 வார வயதுடைய 3 அல்லது அதற்கு மேற்பட்ட இலைகளைக் கொண்ட சிறிய குமிழ்கள் உருவாகியுள்ள, ஆரோக்கியமான நாற்றுக்களை தெரிவு செய்யவும்.
- பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்த திராம் என்னும் பங்கசு நாசினியில் 18 கிராமை 10 லீட்டர் நீரில் கலந்து 30 நிமிடங்களுக்கு நாற்றுக்களின் குமிழ் பாகத்தை அமிழ்த்தி வைக்கவும்.
- இடைவெளி - 4 x 4 அங்குலம் அல்லது 3 x 3 அங்குலம், 1/2 அங்குல ஆழத்திற்கு நாற்றுக்களை நடுகை செய்யவும்.

**பசளை இடல்**

**கற்பிட்டிய பிரதேசத்திற்கான பசளைச் சிபாரிசு (ஏக்கரிற்கு கிலோ கிராம்)**

| பசளை இடும் சந்தர்ப்பம் | யூரியா | அமோனியம் சல்பேட் | TSP | MOP |
|---|---|---|---|---|
| அடிக்கட்டுப் பசளை (கன்று நட 1, 2 நாட்களுக்கு முன்) | - | 60 | 40 | 20 |
| நட்டு 3 வாரங்களின் பின் | 26 | - | - | - |
| நட்டு 6 வாரங்களின் பின் | 26 | - | - | 10 |

**ஏனைய பிரதேசங்களிற்கு (ஏக்கரிற்கு கிலோ கிராம்)**

| பசளை இடும் சந்தர்ப்பம் | யூரியா | TSP | MOP |
|---|---|---|---|
| அடிக்கட்டுப்பசளை (கன்று நட 1,2 நாட்களுக்கு முன்) | 26 | 40 | 20 |
| நட்டு 3 வாரங்களின் பின் | 26 | - | - |
| நட்டு 6 வாரங்களின் பின் | 26 | - | 10 |

**நீர்ப்பாசனம்**

- தரை மேல் நீர்ப்பாசனம்
- சொட்டு நீர்ப்பாசனம் மூலம் நீரை வழங்கவும்.

**களைக்கட்டுப்பாடு**

- பெரிய வெங்காய நாற்றுக்களை நட்ட பின், முளைப்பதற்கு முன்னான ஒரு களைநாசினியை விசிறவும்.
- இயலுமான வரை பத்திரக் கலவை (மூடுபடை) இடவும். இதனால் களைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள முடியும்.

**நோய், பீடைக் கட்டுப்பாடு**

| நோய் | கட்டுப்பாடு |
|---|---|
| நாற்றுமேடையில் நாற்றழுகல் | • நீர் வடிந்து செல்வதை மேம்படுத்தல்.<br>• நோய் ஏற்பட்ட பகுதியை தோட்டத்திலிருந்து அகற்றுதல்.<br>• பங்கசு நோய்க்காக சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளை விசிறுதல். |
| வித்து முளைத்தலுக்கு முன்னான நாற்றுழுகல் | |
| வித்து முளைத்தப் பின்னரான நாற்றுழுகல் | |
| பங்கசினால் ஏற்படும் குமிழழுகல் | |
| பக்றீரியாவினால் ஏற்படும் குமிழழுகல் | |
| ஊதாப் புள்ளி நோய் | |
| அந்திரக்நோசு / டிஸ்கோ இலைச் சுருளல் நோய் | |
| **பீடைகள்** | **கட்டுப்பாடு** |
| பனிப்பூச்சி | • சேதமடைந்த பகுதிகளை அகற்றவும் |
| வெங்காயப் புழு | • வேப்பக் கரைசலை விசிறுதல் |
| வெங்காய குமிழ் சிற்றுண்ணி | • சிபாரிசு செய்யப்பட்ட பீடைநாசினி / சிற்றுண்ணி நாசினி தெளித்தல் |

**அறுவடை செய்தலும், பதப்படுத்தலும்**

- அறுவடை செய்தவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் நீர்ப்பாசனத்தை நிறுத்தவும்.
- இலைகள் மஞ்சள் நிறமாகி கழுத்துப்பகுதி முறிந்து விழுந்த பின் ஒரு கிழமைக்கு தோட்டத்தில் பதமடைய விட்டு அறுவடை செய்யவும்.

**அறுவடைக்குப் பின்**

- குமிழ்களின் கழுத்துப்பகுதியானது பச்சை நிறம் இல்லாது மெலிதாகும் வரை உலர்த்தவும்
- பதப்படுத்திய குமிழ்களில் உலர்ந்த இலைகளை வெட்டி அகற்றவும்.

**களஞ்சியப்படுத்தல்**

- நன்கு காற்றோட்டமுள்ள இருள் அற்ற, உலர்ந்த இடத்தில் களஞ்சியப்படுத்தவும்.
- அடுத்த போகத்தில் விதை உற்பத்திக்காக குமிழ்களில் ஒரு பகுதியை சேமித்து வைக்கவும்

"கொரோனாவைத் தோற்கடிப்போம் ~ உணவு நெருக்கடியை வெற்றிக் கொள்வோம்"

**பெரிய வெங்காயச் செய்கை தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க விவசாயத் திணைக்களத்தின் 1920 விவசாய ஆலோசனை சேவையை அழைக்கவும்.**

**விவசாயப் போதனாசிரியர் / தொழில்நுட்ப உதவியாளர் / மகாவலி வெளிக்கள உதவியாளர்**


தொலைபேசி இலக்கம் :-

NAICC Designed by: NATIONAL AGRICULTURE INFORMATION & COMMUNICATION CENTRE, Department of Agriculture

**தேசிய உணவு உற்பத்தி செயற்றிட்டம்**

**சிறு போகம் 2020**

# பெரிய வெங்காயச் செய்கை



**விவசாயத் திணைக்களத்தின் வெளியீடு 2020**